அமைச்சர் அவர்கள் மருத்துவரையாவது அங்கு டெபுடேஷனில் காரியாப்பட்டியில் இருக்கக்கூடிய அரசு மருத்துவரை அங்கு வாரத்திற்கு 2 நாட்களோ 3 நாட்களோ-போடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். நாங்களே-அந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களே இடத்தையும் தருகின்றோம். அதற்குண்டான வசதியும் செய்து தருகிறோம் என்பதையும் தங்கள் வாயிலாக அவரிடம் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவமனைக்கு இடம் வாங்குவதோ அல்லது கட்டிடம் கட்டுவதோ அரசாங்கத்திற்கு கொஞ்சம் சுலபம்தான். ஆனால் அதற்கு மருத்துவர்கள் போடுவது என்பதுதான் ரெக்கரிங் காஸ்ட் அதிலேதான் கூடுதலாக வருகிறது. எனவேதான் பிரச்சினைகள் ஏற்படுகிறது. இருந்தாலும் இவ்வளவு அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே முயற்சி எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே உடனடியாக நீங்கள் அதற்கு ஏற்பாட்டைச் செய்யுங்கள். முதல் கட்டமாக டெபுடேஷனிலே மருத்துவர் ஒரு நாள் 2 நாள் அங்கே வருவதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி நாங்கள் ஆய்வு செய்கிறோம். அடுத்த ஆண்டு இதைப்பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 345, திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

345—

பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமித்தல்

35802—திரு. வி. கே. சின்னசாமி:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர், சிறார்க்கென இயக்கப்படும் பேருந்துகளில் பெண் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மகளிர், சிறார்க்கென முழுநேரமும் பேருந்துகள் இயக்கப்படவில்லை. அவ்வாறு பேருந்துகள் இயக்கப்படும் பொழுது, பெண்களை ஓட்டுநர்களாகவும், நடத்துனர்களாகவும் நியமிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

1995 ஏப்ரல் 19]

திரு. வி. கே. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனையோ மேடு பள்ளம் வழியிலே இருந்தாலும் எத்தனையோ பேர் பள்ளங்களை, குழிகளை வெட்ட நினைத்தாலும் அத்தனையும் தாண்டி அஞ்சாமல் காலை முன் வையடா என்ற அடிப்படையில் இன்றைக்கு சிறந்த ஒரு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த காவல்துறை மானிய கோரிக்கையின்போது காவல்துறையிலே 30% பெண்களை நியமிப்போம் என்ற அறிவிப்பை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்தார்கள். ஆக அந்த அடிப்படையிலே அரசு அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர், நடத்துநர் பணிகளை எதிர்காலத்தில் இந்த 30 சதவிகிதத்தை பெண்களைக் கொண்டு நிரப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பாரா? அப்படி ஏதும் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புவதோடு பெண்கள் ஓட்டுகின்ற வாகனங்கள் 2 சக்கர வாகனங்கள் ஆனாலும் சரி, கார், ஜீப் போன்ற எல்லா வாகனங்களையும் இப்போது நகரங்களிலும் கிராமங்களிலும் கூட ஓட்டுகிறார்கள். விபத்து ஏற்படுகின்ற நேரத்திலேகூட அப்படி பெண்கள் ஓட்டுகின்ற வாகனங்கள் விபத்தே இல்லாமல் ஓட்டுகின்ற அளவுக்கு இன்றைக்கு நிலைமைகள் இருக்கின்றன. பக்கத்திலே எல்லாம் ஆண்கள் ஓட்டிச்சென்ற வாகனங்கள் எல்லாம் பள்ளத்திலே குழியிலே விழுந்து இன்றைக்கு அடையாளம் தெரியாமல் போய்விட்டது. ஆனால் தமிழகத்திலே மட்டும்தான் எந்த விபத்தும் ஏற்படாமல் விபத்து இல்லாமல் நடந்துகொண்டிருக்கின்ற நேரத்தில் இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவாரா பரிசிலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்றபோது காவல்துறையைப் போல இதிலே 30% பெண்களை நியமிக்கமுடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். நான் விடையளிக்கின்ற போதே அதை குறிப்பிட்டிருக்கிறேன். முழு நேரமாக பேருந்துகளை இப்போது இயக்கவில்லை. பெண்களுக்கும் சிறார்களுக்கும் முழு நேர பேருந்துகள் இயக்குவதில்லை. காலையில் பீக் ஹவர்ஸ் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் ஒரு முறையும் மாலையில் பீக் ஹவர்ஸ் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில் இரண்டாவது முறையும் இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதிலே இருக்கின்ற பிரச்சினைகளே வேறு. காவல்துறையிலே இருக்கின்ற பிரச்சினைகள் வேறு. வேறு அலுவலகத்திற்கு செல்கின்ற பிரச்சினைகள் வேறு. அதிலே காலையிலே 10 மணிக்கு வந்தால்கூட போதும். ஆனால் ஓட்டுநர், நடத்துநர்களாக இருக்கின்றவர்கள் பர்ஸ்ட் ஷிப்ட் என்று சொல்லப்படுகின்றபோது காலை 4 மணிக்கே அவர்கள் அந்த பணிக்கு

வரவேண்டும். அதேபோல இரண்டாவது ஷிப்ட் என்று சொன்னால் இரவு நேரம் 11 மணிக்கு தனியாக செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அது சாத்தியக் கூறு இல்லை என்று சொன்னேன்.

முற்பகல் 10-25

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையின் பணி மிக கடுமையான ஒரு காரியம். திருடர்களைப் பிடிக்கவேண்டும், கொலைகாரர்களை, கொள்ளை செய்கின்றவர்களைப் பிடிக்கவேண்டும்; கடத்தல்காரர்கள் போன்ற குற்றவாளிகளை எல்லாம் பிடிக்கின்ற வேலைக்கு பெண்களை நியமிக்கின்றபோது இந்த பேருந்துகளை இப்போது ஓட்டுகிறார்கள், லாரி, பஸ் போன்ற பேருந்துகளைத் தான் இயக்குவதைத் தான் நாம் பார்க்க முடியவில்லையே தவிர காரணம் அவர்களுக்கு லைசன்ஸ் கொடுப்பது இல்லை. ஆனால் கார் ஓட்டுகிறார்கள், ஜீப் ஓட்டுகிறார்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறார்கள், ஸ்கூட்டர் ஓட்டுகிறார்கள், இன்னும் கவனமாக ஓட்டுகிறார்கள். இப்போது நடந்து கொண்டிருக்கிற விபத்துக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் கூட - அமைச்சர் அவர்கள் ஆர்.டி.ஓ. மூலம் அல்லது காவல்துறை மூலம் பெற்றால் கூட - பெண்கள் ஓட்டிய வாகனங்களால் ஏற்பட்ட விபத்துக்கள் குறைவு, விபத்து ஆனதாக தகவல் இல்லை. ஆகவே தான் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். சில தாய்மார்கள் என்னிடத்தில் சொல்லுகிறார்கள், பெண்களுக்கு ஓட்டுநராக லைசன்ஸ் கொடுத்து பேருந்துகளில் ஆண்களுக்கு சமமாக நியமித்தால் அல்லது 30 சதவீதம் நியமித்தால் இந்த பேருந்துகளில் நடக்கின்ற விபத்துக்களைக் கூட தடுக்கலாம், தடுக்கப்படும், எண்ணிக்கையும் குறையும் என்று கூட அவர்கள் சொல்லுகிறார்கள். சில பேர் குறிப்பிடுகிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு டிரையலாக ஒரு வருடம், இந்த ஆண்டு 500 டிரைவர் அல்லது 1000 டிரைவர், 1000 நடத்துனர் எடுத்துப் போட்டால் இந்த நஷ்டத்தைக் கூட, இந்த பேருந்துகளில் ஏற்படும் நஷ்டத்தைக் கூட போக்கி லாபத்தில் கூட ஓட்டலாம், என்ற நம்பிக்கைக் கூட ஏற்படுகிறது. காரணம் ஆண்கள் எவ்வளவு சம்பளம் வாங்கினாலும் 1000, 5000 ரூபாய் சம்பளம் வாங்கினாலும் வீட்டில் உள்ள பெண்கள் இடத்தில் தான் கொடுக்கிறார்கள். அந்தப் பெண்கள் முறையாக, பக்குவமாக வரவுக்கு ஏற்ற செலவு செய்து குடும்பத்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கிறீர்களா; கேள்வி வேண்டாம் என்று பார்க்கிறீர்களா ? கேள்வி கேட்பது என்றால் கேளுங்கள்; வேண்டாம் என்றால் உட்காருங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி: அமைச்சருக்கு கொஞ்சம் விளக்கம் சொல்லுகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை விட அமைச்சருக்கு நல்ல விளக்கம் எல்லாம் தெரியும்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த பெண்களை மீண்டும் ஓட்டுநராக, நடத்துனராக, அதிக அளவில் இந்த 30 சதவீதத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மீண்டும் பரிசீலனைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிக நேரமாக பல்வேறு வண்டிகளை இங்கே ஓட்டிக்கொண்டு இருந்தார்கள். இருந்தாலும் கூட லைட் வெகிகிளஸ் என்பது வேறு; தனியாக பெண்கள் தங்களுடைய வாகனங்களை எடுத்துச் சொல்வது வேறு; மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டரில் செல்வது வேறு; ஆனால் இதில் ஓட்டுநராகச் செல்வது வேறு; இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொண்டு ஆகவேண்டும். கேள்விபோடும் போதே புரிந்து கொண்டு இருக்கவேண்டும். இருந்தாலும் பஸ்ஸில் பெண்கள் ஓட்டுநராக, நடத்துனராக நியமிக்கிறபோது பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. காலை நேர ஷிப்ட் என்று சொன்னால் காலை 4.00 மணிக்கு அவர்கள் பணிக்கு வரவேண்டும். மாலை நேர ஷிப்ட் என்று சொன்னால் இரண்டாவது ஷிப்ட்டு முடித்து செல்கிறபோது இரவு 11.00 மணிக்கு தனியாக அவர்கள் வீட்டுக்கு செல்லவேண்டும் காவல்துறையில் அப்படி அல்ல, ஒருவரைப் பிடிக்கவேண்டுமென்று சொன்னால் 4, 5 பெண் காவலர்களாகச் செல்கிறார்கள். அது வேறு; இது வேறு; ஆகவே தான் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. இரண்டாவது அவர்களுக்கு பாதுகாப்புக்கு துப்பாக்கியும் கையில் தந்திருக்கிறார்கள். இவர்களிடம் இல்லை. இரவு நேரத்தில் தனியாகச் செல்லவேண்டும், காலை நேரத்திலே வரவேண்டும். அதே நேரத்தில் பெண்கள் அங்கே நடத்துனராக இருக்கிறபோது பல்வேறு இடர்பாடுகள் இருக்கின்றன. நாம் முதலிலே நடத்துனராகப் போட்டோம். அவர்கள் அத்தனைப் பேரும் அதற்கு பிறகு நடத்துனராக தங்களுடைய பணியினை மேற்கொள்ள முடியாது என்று பல்வேறு உடல் கூறுகள் காரணமாக மென்மையானவர்கள் பெண்கள். ஆகவே தான் நாங்கள் அந்தப் பணிகளைச் செய்ய முடியாது என்று அவர்கள் எடுத்துச் சொன்னதன் வாயிலாக ஸ்டாண்டிங் கண்டக்டர் என்று அவர்களுக்கு அந்தப் பணியை மாற்றி தந்திருக்கிறோம். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தால் பெண்களை அதிலே அமர்த்த முடியாது. இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே ஒரே ஒரு பெண் ஓட்டுநரை மட்டும் தான் நம்முடைய நாகர்கோயிலில் நாங்கள் நியமித்தோம். அங்கே பல்வேறு வழித் தடங்களில் பேருந்தை அவரால் இயக்க முடியவில்லை. அவ்வளவு சிக்கல்கள்

இருக்கின்றன. ஆகவே தான் அவரால் இயக்க முடியாத காரணத்தால் இப்போது டெப்போவில் அவருக்கு அந்தப் பணிகளைச் செய்யச் சொல்லி நாங்கள் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் பெண் சிசு பாதுகாப்புத் திட்டம்; 2 பெண் குழந்தைகள் பிறந்தால் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்பவர்களுக்கு சலுகைகள்; தொடக்கப் பள்ளியில் ஒன்றிலிருந்து 5 வகுப்பு வரை பெண் ஆசிரியர்களை நியமித்தல்; அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அமைத்தல்; இப்படி பெண்களுக்காகவே நல்லாட்சி செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய நல்லாட்சியில் நகர பேருந்துகளில் மட்டுமாவது மகளிர் ஓட்டுநர், நடத்துனர் நியமிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்தை ஓட்டுவது தான் கடினம். அடிக்கடி நிறுத்த வேண்டும்; அடிக்கடி கியர்களை மாற்ற வேண்டும்; அடிக்கடி மக்களால் இடர்பாடுகள் வருகிறபோது அந்த இடர்பாடுகளில் இங்கே அந்தப் பேருந்துகளை இயக்குவது என்பது சாதாரண காரியம் அல்ல. அதைப்போல நகரப் பேருந்துகளில் பெண்கள் சென்று ஆண்கள் அங்கே இருக்கின்றபோது, நூற்றுக்கணக்கான ஆண்கள் ஸ்டாண்டிங்கில் அங்கே நின்று கொண்டு இருக்கிறபோது அதிலே அவர்களிடத்திலே சென்று டிக்கெட் வழங்குவது அவ்வளவு சரியான சாத்தியக் கூறுகளாக இருக்காது. ஆகவே நகரப் பேருந்துகளில் மற்றும் புற நகர் பேருந்துகளில் பெண்களை வைத்து இயக்குவது அவ்வளவு சாத்திய கூறுகளாக இல்லை.தனியாகவே பெண்களுக்காகவே முழு நேரமாக பேருந்துகளை இயக்குகின்ற காலத்தில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 346, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

346—

சிவகாசி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து இயக்குதல்

37369—திரு. ஜெ. பாலகங்காதரன்:*

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—